மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08ஆம் நாள் வெள்ளிக் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 293/2017 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர் .. அருள் வயது .. 53

த/பெ. .. வரதராஜ் சாதி ..

08.4.2022 - வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

வழக்கு சொத்தானது எனக்கு வந்தது என்றால் எனது பாட்டியிடமிருந்து வந்தது. எனது பாட்டியின் பெயர் முனியம்மாள். அவருக்கு எப்படி சொத்து வந்தது என்றால் பாகப்பிரிவினை மூலம் வந்தது. முனியம்மாள் எப்போது இறந்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை யார் யார் பங்கு போட்டுக்கொண்டோம் என்றால் எனது சித்தப்பா சண்முகம், ஆறுமுகம், எனது பெரியம்மா ஜானகி, அவருடைய மகன் சங்கர் அவர்களுடன் நானும் எனது தாயார் உண்ணாமலை ஆகியோரும் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டோம். எந்த தேதியில் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் 1992ம் வருடம் ஜூலை மாதத்தில் பிரித்துக்கொண்டோம். நாங்கள் பங்கு போட்டுக்கொள்வதற்கு முன்பாக எனது பாட்டி முனியம்மாள் யாருக்காவது அவரது சொத்தை உயில் மூலம் யாருக்காவது எழுதி வைத்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு பங்காக வந்த சொத்தின் சர்வே எண்.175/9ல் 1 ஏக்கர் 14 செண்ட் நிலம் வந்தது. உயில் எழுதியது தெரிந்தே அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடன் சார்ந்த சில வாரிசுகளை விட்டு விட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.